A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 38 / 2023**

திருமதி M.மீனாட்சி,
க/பெ. A.மச்சக்காளை,
4/39, பாண்டியன் இல்லம், சாந்தி நகர்,
மூன்றுமாவடி, கோ. புதூர், மதுரை – 625 007.

………மேல்முறையீட்டாளர்
(Rep by திரு V. செல்வராஜ்)

எதிர்

செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு,
திருமங்கலம் – 625 706. . . . எதிர்மனுதாரர்
(திரு.P. முத்தரசு, செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்)

**மனு பெறப்பட்ட நாள்: 26-05-2023**

**கேட்புரை நாள்: 20-07-2023**

**ஆணை நாள்: 07-08-2023**

26.05.2023 அன்று பெறப்பட்ட திருமதி M.மீனாட்சி, க/பெ. A.மச்சக்காளை, 4/39, பாண்டியன் இல்லம், சாந்தி நகர், மூன்றுமாவடி, கோ. புதூர், மதுரை – 625 007 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 38/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 20.07.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

## 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தனது மின் இணைப்பு எண்.144–009–64–இல் கருவேலம்பட்டி பகிர்மானம் கணினியில் தவறுதலாக 5 HP என குறிப்பிட்டுள்ளதை நீக்கி 10 HP என மாற்றி உத்தரவு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

## 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தனது மின் இணைப்பு எண்.144–009–64–இல் கருவேலம்பட்டி பகிர்மானம் கணினியில் தவறுதலாக 5 HP என குறிப்பிட்டுள்ளதை நீக்கி 10 HP என மாற்றி உத்தரவு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய இடத்தை ஆய்வு செய்யப்பட்டதில் கிணற்றில் உள்ள இரண்டு மோட்டார்களுமே 5 HP திறன்தான் உள்ளதாகவும், consumer ledger ல் இருக்கின்ற படியே கிணற்றிலும் அதே அளவு மோட்டார் திறன் உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, தவறுதலாக 5 HP என உள்ள பகிர்மான கணினியில் 10 HP என மாற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் மதுரை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 13.02.2023 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின்பகிர்மான வட்டம் 11.05.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 மதுரை மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 11.05.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*முறையீட்டாளரின் கோரிக்கையின் பேரில் உரிய அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்மனுதாரருக்கு மன்றம் ஆணையிட்டு மனு முடித்து வைக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 20.07.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு V. செல்வராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு.P. முத்தரசு, செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம், மதுரை மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண்.64 கருவேலம்பட்டி – பகிர்மானம் தனது விவசாய தோட்டத்திற்கு மின் இணைப்பு 10 HP கணக்கில் வழங்கப்பட்டு முறையாக அதாவது சேஞ்ச் ஓவர் செய்து தோட்டத்திற்கு நீர் பாய்ச்சி பயிர்களை காப்பாற்றி வருவதாகவும், ஆனால் உதவி பொறியாளர் கடிதத்தின் படி 5 HP தான் கணினியில் உள்ளது என்று குறிப்பிட்டு 02.02.2023 கடிதம் எழுதி உள்ளதாகவும், அப்படி இருக்கும் வகையில் தனது கிணற்றிற்கு 5 HP கிடையாது 10 HP தான் என்று

தனது SC டாக்கட்டில் மின் பளு (sanction Load) உள்ளதாகவும், அதற்கு 28.12.88ல் ஆடிட்டில் கண்டுபிடித்து சொன்ன வித்தியாசத் தொகை ரூ. 1453.10/- செலுத்த கோரப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

5.2 மேற்கூறிய தொகையையும் செலுத்திவிட்டதாகவும், தான் மின்சாரம் இணைப்பு பெறும் பொழுது 10HP தான் உள்ளது இப்படி இருக்க மின்வாரிய அலுவலகத்தில் 5 HP என்று குறிப்பிட்டு கூறியது மின்வாரிய அலுவலக குறைபாடுதான் காரணம் எனவும், எனவே தனது முறையீட்டை பரிசீலனை செய்து 10 HP தான் சரி என்று ஆய்வு செய்து உத்தரவு வழங்க ஆவன செய்து கொடுக்கும் படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மதுரை மின் நுகர்வோர் மன்றம் முன்பாக 13.02.2023 அன்று முறையீடு செய்ததன்படி முறையீடு பதிவு எண்.17/2023 ஆக பதிவு செய்யப்பட்டு கடந்த 29.03.2023 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்படி உத்தரவில் உரிய ஆவணங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்மனுதாரருக்கு மன்றம் ஆணையிட்டதாகவும், ஆனால் எதிர்மனுதாரர்கள் ஆவணங்கள் எதுவும் இல்லை என கூறி தனது கோரிக்கையை நிராகரித்துவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 எனவே தன் மின் இணைப்பு 64 கருவேலம்பட்டி பகிர்மானம் கணினியில் தவறுதலாக 5 HP என குறிப்பிட்டுள்ளதை நீக்கி 10 HP என மாற்றி உத்தரவு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மதுரை மின்பகிர்மான வட்டம் ஊரகம்/திருப்பரங்குன்றம் பிரிவிற்குட்பட்ட திருமதி. மீனாட்சி, க/பெ.A/மச்சக்காளை அவர்களின் மின் இணைப்பு எண்.144-009-64 க்கு கணினியில் Consumer Ledger யில் Sanction Load 5 HP என்று தான் உள்ளதாகவும், மேலும், 2016-இல் திருமங்களம் வருவாய் பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் சில ஆவணங்கள் எதிர்பாராத விதமாக எரிந்துவிட்டதாகவும், எனவே இவ்விவசாய மின் இணைப்பிற்கான Test Report மற்றும் வேறு ஆவணங்கள் எதுவும் வருவாய் பிரிவில்

தேடிப்பார்த்ததில் கிடைக்கப்பெறவில்லை என்றும், எனவே இருக்கின்ற ஒரே ஆவணமான Consumer Ledger இணைத்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 Tamil Nadu Electricity Supply Code 5(3) ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி மின் இணைப்பு எண். 144-009-64 ல் இணைக்கப்பட்டுள்ள மோட்டார்கள் கிணற்றில் ஒரு மோட்டார் மற்றும் Change over switch மூலம் Borewell ல் இணைக்கப்பட்டுள்ள மற்றொரு மோட்டார் (Submersible Type) இரண்டும் Load test மூலம் ஆராய்ந்ததில் இரண்டு மோட்டார்களுமே 5 HP திறன்தான் உள்ளதாகவும், எனவே consumer ledger ல் இருக்கின்ற படியே கிணற்றிலும் அதே அளவு மோட்டார் திறன் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி M.மீனாட்சி தனது விவசாய தோட்டத்திற்கு மின் இணைப்பு எண்.64 பெற்று 10 HP கணக்கில் வழங்கப்பட்டு முறையாக சேஞ்ச் ஓவர் செய்து தோட்டத்திற்கு நீர் பாய்ச்சி பயிர்களை காப்பாற்றி வருவதாகவும், ஆனால் உதவி பொறியாளர் 5 HP தான் கணினியில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அதற்கு ஆதாரமாக 28.12.88-இல் SC டாக்கட்டில் மின் பளு (sanction Load) 10 HP உள்ளதை ஆடிட்டில் கண்டுபிடித்து தெரிவித்த வித்தியாசத் தொகை ரூ.1453.10/- செலுத்த கோரப்பட்டதாகவும், எனவே மேல்முறையீட்டாளருடைய மின் இணைப்பின் மின் பளு 10 HP தான் என உறுதி செய்து கணினியில் தவறுதலாக 5 HP என குறிப்பிட்டுள்ளதை நீக்கி 10 HP என மாற்றி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான மின் இணைப்பு எண்.144-009-64 க்கு கணினியில் Consumer Ledger யில் Sanction Load 5 HP என்று தான் உள்ளதாகவும், வருவாய் பிரிவு அலுவலகத்தில் 2016-இல் தீ விபத்து ஏற்பட்டு எதிர்பாராத விதமாக சில ஆவணங்கள் அழிந்துவிட்டதாகவும், இவ்விவசாய மின் இணைப்பிற்கான Test Report மற்றும் வேறு ஆவணங்கள் எதுவும் வருவாய் பிரிவில்

கிடைக்கப்பெறவில்லை எனவும், எனவே இருக்கின்ற ஒரே ஆவணமான Consumer Ledger–ஐ பார்க்கும் போது மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பின் மின் பளு 5HP தான் என தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை அடுத்து களஆய்வு மேற்கொண்டதாகவும், மேல்முறையீட்டாளருக்கு சொந்தமான கிணற்றில் ஒரு மோட்டார் மற்றும் Change over switch மூலம் Borewell–இல் இணைக்கப்பட்டுள்ள மற்றொரு மோட்டார் (Submersible Type) இரண்டும் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு மோட்டார்களுமே 5 HP திறன்தான் உள்ளதாக கண்டறியப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேல்முறையீட்டாளர், இளமின் பொறியாளர்/கிராமப் பகுதி, தமிழ்நாடு மின்சார வாரியம், திருப்பரங்குன்றம், (இருப்பு) திருநகர், மதுரை – 6–யிடமிருந்து 28.12.1988–இல் பெறப்பட்ட கடிதத்தில் 10HP–க்கு பணம் செலுத்தாமல் 5HP–க்கு பணம் செலுத்தியதால் மின் கட்டண குறைவுத் தொகையை ஆடிட்டில் செலுத்தக் கோரிய கடிதத்தின்படி தன்னுடைய மின் இணைப்பின் மின்பளு 10HP தான் என்று தெரிவித்துள்ளார்.

7.6 வாதி மற்றும் பிரதிவாதியின் வாதங்களை ஆராயும்போது எதிர்மனுதாரர் தனது அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்ட காரணத்தினால் அனைத்து ஆவணங்களும் அழிந்துவிட்டதாகவும், அந்த காலகட்டத்தின் எந்த ஆவணமும் கிடைக்கப்பெறவில்லை என கூறியுள்ளார். இந்நிலையில், மேல்முறையீட்டாளர் மின்இணைப்பு தனக்கு முந்தைய பயனீட்டாளரிடமிருந்து விற்பனை அடிப்படையில் பெற்றதாகவும், அதை பயன்படுத்தி வருவதாகவும், ஆடிட் குறைவுத் தொகைக்கான ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி 10 HP–க்கான மின்பளு வழங்குமாறு முறையிட்டுள்ளார். ஆனால், ஆவணத்தை ஆராயும் போது திருமதி சுசீலா என்பவரது பெயரில் 1985–1988 காலக்கட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே, தணிக்கை நடைபெற்ற காலத்தில் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பிற்கு உரிமை இல்லாதவர் என அறியப்படுகிறது.

7.7 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு வழங்கியது தொடர்பான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்க இயலவில்லை. மேலும், change over switch பெற மேல்முறையீட்டாளர்

அனுமதி கோரிய கடிதத்தில் உரிமதாரர் யாருடைய ஒப்புகையும் இல்லாததாலும், அந்த ஆவணத்தை ஆதாரமாக எடுத்துக் கொள்ள இயலவில்லை. தணிக்கை குறைவுத் தொகையானது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே போடப்பட்டதும், மேல்முறையீட்டாளர் அந்த காலகட்டத்தில் பயனாளியாக இல்லாததும் தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் அந்த மின் இணைப்பை 1989 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்த காலத்திலிருந்து 2023 ஆண்டு வரை இடைப்பட்ட காலங்களில் பயன்படுத்திய மின்சுமை 5HP-க்கு பதில் 10 HP என்ற கோரிக்கையை வைக்கவில்லை என்று தெரியவருகிறது.

7.8 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பின் மின் பளு 5HP-யா அல்லது 10 HP-யா என்பதற்கு இரண்டு பக்கங்களிலும் சரியான ஆவணங்கள் இல்லாத நிலையில் ஆவணங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பிற்கான மின்பளுவை தீர்மானிக்க இயலவில்லை. எனவே, விஞ்ஞான பூர்வமான அடிப்படையில் மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பின் மின் பளு Load test மூலம் 5HP தான் என்பது எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் மூலம் உறுதி செய்யப்படுகிறது. இந்த ஆய்வறிக்கையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் எந்த முறையீடும் செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது.

7.9 எதிர்மனுதாரர் களஆய்வு மேற்கொண்டதில் மேல்முறையீட்டாளருக்கு சொந்தமாக கிணற்றில் ஒரு மோட்டார் மற்றும் Change over switch மூலம் Borewell-இல் இணைக்கப்பட்டுள்ள மற்றொரு மோட்டார் (Submersible Type) இரண்டும் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு மோட்டார்களுமே 5 HP திறன்தான் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக, தமிழ்நாடு மின் பகிர்மான விதி 29(2)(e)-ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"(e) Installation of changeover switch in an agricultural service connection shall be permitted for using the supply either for a motor-pump set or for a motor-compressor set to lift water from another well/bore well in a contiguous land for irrigation purpose only or for operating a motor for allied agricultural purposes subject to the condition that only the motor-pump set or the motor compressor set or the motor for the allied agricultural purposes should be used at a time, within the contracted load."*

7.10 மேற்கூறிய விதியை ஆராயும் போது எந்த ஒரு வேளாண் மின் இணைப்பிற்கும், இணைப்பு முறை மாற்றல் (change over switch) மூலம், மற்றொரு கிணறு/ஆழ் குழாய் கிணற்றிலிருந்து, நீர் இறைப்பி– விசைக்குழாய்(Motor pump set) அல்லது நீர் இறைப்பி – காற்றமுக்கி (Motor compressor set) மூலமாக நீர் இறைப்பதற்கு வேளாண் மின் இணைப்பு மின்சாரத்தை பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. அதற்கு நிபந்தனையாக ஒரே சமயத்தில் நீர் இறைப்பியையோ அல்லது நீர் இறைப்பி/விசைக்குழாய் அல்லது நீர் இறைப்பி – காற்றமுக்கி இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் அனுமதிக்கப்பட்ட மின் பளுவிற்குள் வேளாண் சம்பந்தப்பட்ட உபயோகங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

7.11 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பின் Load test ஆய்வறிக்கையின்படி தற்சமயம் மேல்முறையீட்டாளர் பயன்படுத்தும் மின் மோட்டார் 5HP தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேபோல், அவர் change over switch–இன் மூலம் பயன்படுத்திய மின் மோட்டாரும் 5HP தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் பகிர்மான விதி 29(2)(e)–படி change over switch அமைக்க நிபந்தனையாக ஒரே சமயத்தில் நீர் இறைப்பியையோ அல்லது நீர் இறைப்பி/விசைக்குழாய் அல்லது நீர் இறைப்பி – காற்றமுக்கி இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் அனுமதிக்கப்பட்ட மின் பளுவிற்குள் வேளாண் சம்பந்தப்பட்ட உபயோகங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பு மற்றும் change over switch–ன் மின்மோட்டார் ஆகியவற்றில் மின்பகிர்மான விதி29(2)(e)–படி ஒப்பந்த சுமைக்கு மிகாமல் 5HP–க்குள் இருப்பது களஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பின் ஒப்பந்த சுமை நுகர்வோர் (Consumer Ledger) பேரேட்டில் உள்ளபடி 5HP தான் என தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் விவசாய மின்னிணைப்பின் Load test ஆய்வறிக்கையின்படி தற்சமயம் மேல்முறையீட்டாளர் பயன்படுத்தும் மின் மோட்டார் 5HP தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பின் மின்பளு 10HP என்பதற்கான போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் மின் இணைப்பின் மின்பளுவை 5HP–

லிருந்து 10HP–ஆக மாற்றி தரக் கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 38/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திருமதி M.மீனாட்சி, – By RPAD
க/பெ. A.மச்சக்காளை,
4/39, பாண்டியன் இல்லம், சாந்தி நகர்,
மூன்றுமாவடி, கோ. புதூர், மதுரை – 625 007.

2. செயற்பொறியாளர்/பகிர்மானம்/திருமங்கலம்,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
SS வளாகம், உசிலம்பட்டி ரோடு,
திருமங்கலம் – 625 706.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ரேஸ் கோர்ஸ் ரோடு, K, புதூர், மதுரை – 625 007.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.